**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

*13th செப்டம்பர் / September 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

*MYF Sunday / வாலிபர் ஞாயிறு*

| | |
|---|---|
| ✝ ***ஆராதனைக்கு அழைப்பு***<br>Call to Worship | ***மிஸ். ஜெசிகா***<br>Miss. Jessica |
| ***இறைவணக்கப்பாடல்***<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| ***ஜெபம்***<br>Prayer | ***மிஸ். ஜெசிகா***<br>Miss. Jessica |
| ✝ ***தொடக்க பாடல்***<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

*நல் மீட்பர் பட்சம் நில்லும்*

*1.* *நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*ரட்சணிய வீரரே!*
*ராஜாவின் கொடியேற்றி*
*போராட்டம் செய்யுமே!*
*சேனாதிபதி இயேசு*
*மாற்றாரை மேற்கொள்வார்*
*பின் வெற்றி கிரீடம் சூடி*
*செங்கோலும் ஓச்சுவார்.*

*2.* *நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எக்காளம் ஊதுங்கால்,*
*போர்க்கோலத்தோடு சென்று*
*மெய் விசுவாசத்தால்*
*அஞ்சாமல் ஆண்மையோடே*
*போராடி வாருமேன்;*
*பிசாசின் திரள்சேனை*
*நீர் வீழ்த்தி வெல்லுமேன்.*

*3.* *நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எவ்வீர சூரமும்*
*நம்பாமல், திவ்விய சக்தி*
*பெற்றே பிரயோகியும்;*
*சர்வாயுதத்தை ஈயும்*
*கர்த்தாவை சாருவீர்*
*எம்மோசமும் பாராமல்*
*முன் தண்டில் செல்லுவீர்.*

*4.* *நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*போராட்டம் ஓயுமே;*
*வெம்போரின் கோஷ்டம், வெற்றி*
*பாட்டாக மாறுமே*
*மேற்கொள்ளும் வீரர் ஜீவ*
*பொற் கிரீடம் சூடுவார்;*
*விண் லோக நாதரோடே*
*வீற்றரசாளுவார்.*

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 37ம் ஞாயிறு***<br>***"சங்கீதம் 111"*** | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***"கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள்"***

**Psalter Reading "Psalm 111"**

| | |
|---|---|
| ✝ ***தந்தை போற்றி***<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ***துதி ஆராதனை***<br>Singspiration | |
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***<br>Thanksgiving & Pastoral Prayer | |
| ***பரமண்டல ஜெபம்***<br>Lord's Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ***சிறப்புப் பாடல்***<br>Special song | |
| Prayer for Youth | |
| ✝ ***காணிக்கை பாடல்***<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***அல்லேலூயா கர்த்தரையே***

*1.* *அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்*
*அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்*
*வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத்துதியுங்கள்*
*எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்.*

***இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்***
***பூமியில் ஆட்சி செய்வார்;***
***அல்லேலூயா அல்லேலூயா***
***தேவனைத் துதியுங்கள்.***

*2.* *தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்*
*இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்*
*எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்*
*எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்.*

*3.* *சூரியனே,சந்திரனே தேவனைத் துதியுங்கள்*
*ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்*
*அக்கினியே, கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்*
*அக்கினியாய்க் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்.*

*4.* பிள்ளைகளே, வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்;

*5.* ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை கிறிஸ்தவர்கள் நிரப்புவார் துதியுங்கள்.

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்***<br>Doxology | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>***1 யோவான் 5 : 1 – 13***<br>Scripture Reading<br>1John 5 : 1 – 13 | Tamil - Evangeline<br>English - Roshin |
| ***அருளுரை***<br>Sermon | ***மறைதிரு. ஆர்.பிரபு***<br>Rev. R. Prabhu |
| ✝ ***அர்ப்பணகீதம்***<br>Offertory & Closing Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***இயேசு எந்தன் வாழ்வின் பெலனானார்***

**இயேசு எந்தன் வாழ்வின் பெலனானார்**
**எனக்கென்ன ஆனந்தம்**

*1.* எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக
எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்

*2.* பெருந்தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வருங்காலங்கள் உமதாகும் - எந்தன்

*3.* உந்தன் ஊழியம் செய்திடவே
என்னை உமக்கென தெரிந்து கொண்டீர்
உந்தன் சித்தம் என்னில் விளங்க
என்னைப் படைக்கிறேன் உமக்காக

**அறிவிப்புகள்**
Announcements

| | |
|---|---|
| ✝ ***மனப்பாட வசனங்கள்***<br>Memory Verses | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***1 யோவான் 4 : 2***
1 John 4 : 2

***2. தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **⁄ Indicates Congregation standing**